**TAMILNADU STATE MOOT COMMITTEE**

**(CONSTITUTED BY DIRECTORATE OF LEGAL STUDIES)**

**ACADEMIC YEAR 2024-2025**

# MOOT PROPOSITION FOR INTRA-COLLEGE MOOT COURT COMPETITION

**(English & Tamil)**

The Republic of Tensaniya is a democratic country situated in the Southern part of the Asian Sub Continent. It is the second-most populous country, the seventh-largest country by land area, and the most populous democracy in the world. It is a pluralistic, multilingual and multi-ethnic society. The country has become a fast-growing major economy and a hub for information technology services. The affordable internet in the country has allowed citizens across age groups engage extensively with social media.

The famous social media platforms such as NotsApp, Facenote, TwitX etc. have enabled its users to show their creativity, ask questions, to be informed and freely share their views, including criticism of the Government and its functionaries. These platforms have given voices to the mass, however, on the other hand these platforms have become cause of serious concerns and unwarranted consequences which are often very disturbing in nature. These concerns rise from growing instances of spread of fake news, rampant abuse of social media to share morphed images of women and contents related to revenge porn etc. The parties affected by such concerns were devoid of any robust mechanism to seek justice. There was no strict complaint mechanism wherein the ordinary users of social media and OTT platforms could register their complaint and get it redressed within defined timeline.

With a rapidly expanding digital footprint, ensuring safety of the electronically-storing/sharing data, personal information and sensitive content on various e-platform data is prerogative of the government which has been subjected to series of questions and apprehension.

The encryption and cryptographic techniques for preserving the security of online communication have become increasingly contested in Tensaniya. Rapid digitalization in the past decade has led to the proliferation of domestic and foreign online communication services that use encryption and, consequently, pose challenges to national security bodies and law enforcement agencies. To help overcome these challenges, the Tensaniya government on February 25, 2021, introduced the Information Technology (Intermediary Guidelines and Digital Media Ethics Code) Rules, 2021. Part-I of the Rules provides the definition clause. Part-II regulates intermediaries. Part-III of the Rules regulates publishers of news and current affairs content (Digital News Media) and publishers of online curated content (OTT platforms). Soon after its enactment it has sparkled considerable controversy and face d oppositions from various social media intermediaries as the new rules grant the government extensive authority over social media platforms, digital news outlets, and video streaming services, rendering them susceptible to censorship.

NotsApp, a leading online messaging application in Tensaniya has approached the High court of Indraprastha, expressing concerns about several provisions of the IT Rules that it considers detrimental to user privacy. One of the key features of NotsApp is its use of end-to-end encryption technology, which guarantees the complete privacy of its users. This technology helps ensure that the exchange of messages between individuals or groups remains secure and confidential ensuring privacy. With Tensaniya hosting the largest monthly user base of 487.5 million, NotsApp stated that complying with these rules could potentially infringe upon people's rights to free speech and privacy as it required messaging communication providers to supply information regarding the first originators of messages.

On April 06, 2023, the Tensaniya Government for the second time notified amendments to the Information Technology (Intermediary Guidelines and Digital Media Ethics Code) Rules, 2021. The IT Amendment Rules, 2023 focused on regulating online gaming as well as fact checking of “false”, “fake” or “misleading” information relating to the Union Government. Among the various amendments, the most alarming one provides for the establishment of a fact check unit (“FCU”), established at the sole discretion of the Tensaniya government, aimed at fact checking online information related to the Union government. This amendment gave the Tensaniya government the power to decide on the authenticity of the information and exercise wide-ranging powers of censorship by compelling intermediaries to take down posts that are deemed fake or

false. Here the information will essentially be fact checked by the government, through an FCU established by it.

A political commentator and podcaster named Kunal approached the High court of Kinsai seeking an interim stay to Rules 3(i)(II)(A) and (C) of the IT Amendment Rules, 2023. The plea mentioned that while there is already a robust existing mechanism to address the concern of fake news about the Union government in the form of the Press Information Bureau, the establishment of FCU would muzzle speech against the Central government. On the refusal by the Kinsai High court to grant stay, Kunal has now approached the Supreme court.

Under part II of the IT Rules,2021, the Rule 9 requires publishers of news on the internet and publishers of online curated content to comply with a Code of Ethics and also prescribed a three-tier grievance redressal mechanism headed by the government. The Norms of Journalistic Conduct are guidelines framed by the Press Council of Tensaniya. The Code of Ethics requires digital news media not to publish content prohibited under any law and to comply with the Norms of Journalistic Conduct of the Press Council of Tensaniya and the Programme Code under Section 5 of the Cable Television Network (Regulation) Act, 1995. Rule 9(3) provides a three-tier grievance redressal mechanism that allows anyone to raise a complaint if digital news media/OTT platforms do not comply with the Code of Ethics. Both the sub rules faced severe backlashes from various journalists and news media across the country as the Code of Ethics has exalted the norms to the status of mandatory compliance. On the other hand, the Programme Code regulates cable services but cannot regulate writers/editors/publishers of content on the internet. A digital news media named Treelet approached the Supreme court stating that Rule 9 goes against the provisions of the Information Technology (Amendment) Act 2002. It was also contended that the rules are ex-facie draconian, arbitrary, beyond the rule-making power conferred by the Parliament on the Government and violative of the right to freedom of speech and expression.

The Supreme court has transferred and tagged all the matters pending before various High Courts relating to IT Rules, 2021 to prevent divergent judicial views and decided to hear on the same day.

ISSUES:

1. Whether the impugned provisions of the IT Rules, 2021 requires social media intermediaries to enable the identification of the first originator of information, are constitutionally valid in light of the right to privacy and whether they are in consonance with the provisions of the Information Technology Act, 2000?
2. Whether the Fact Check Unit gives excessive power to the executive branch and infringes upon the Information Technology Act, 2000?
3. Whether the establishment of Fact Check Unit is ultra vires to the Constitution of Tensaniya?
4. Whether Rule 9 of the IT Rules, 2021, which imposes a Code of Ethics and a three-tier grievance redressal mechanism, exceeds the legislative competence granted under the Information Technology Act, 2000, and infringes upon the editorial freedom of digital news media and OTT platforms?

NOTE:

The laws of Republic of Tensaniyan is *in pari materia* to the Republic of India.

## வழக்கின் பொருண்மைகள்

டென்சானியா என்ற குடியரசு நாடு தென் ஆசியத் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள ஜனநாயக நாடாகும். இது மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தையும், நிலப்பரப்பில் ஏழாவது பெரிய நாடாகவும் மற்றும் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகவும் உள்ளது. இது பன்முக, பன்மொழி மற்றும் பல இனம் கொண்ட நாடாகும். இந்நாடு வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதாரமாகவும் தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான முக்கிய மையமாகவும் மாறியுள்ளது. அனைத்து வயதினரும் சமூக ஊடகங்களை பயன்படுத்தும் வகையில் இணைய வசதி மிகவும் மலிவாக கிடைக்கிறது.

இந்நாட்டில் உள்ள சமூக ஊடக செயலிகளான நோட்ஸ்ஆப், பேஸ்நோட், ட்விட்எக்ஸ் போன்ற பிரபலமான சமூக ஊடக செயலிகளின் மூலமாக, அதை பயன்படுத்தும் பயனாளர்கள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், கேள்விகளை கேட்கவும், தகவல் பெறவும் மற்றும் அரசாங்கத்தை பற்றிய தங்கள் கருத்துக்களையும் மற்றும் விமர்சனங்களை பகிரவும் ஏதுவாக அமைந்துள்ளன. அந்த நாடு அதற்கான உரிமைகளையும் தந்துள்ளன. அதனால் இச்செயலிகள் மக்களின் தற்போதைய குரலாக மாறியுள்ளன.

இவ்வாறான செயலிகள் பல குழப்பங்களை ஏற்படுத்தியது மட்டுமல்லாது சமூகத்தை பெருமளவில் பாதித்துள்ளது. அதாவது, போலிச் செய்திகளைப் பரப்புதல், பெண்களை உருவ மாற்றம் செய்து அந்த படங்களை பழிவாங்கும் நோக்கத்தோடு ஆபாசமாக வெளியிடுதல் போன்ற துஷ்பிரயோகங்கள் இந்த ஊடகங்கள் மூலமாக அதிகரித்துள்ளது. இந்த துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவதற்கான எந்த ஒரு வலுவான குறை தீர்க்கும் முறையோ அல்லது அது சம்மந்தமாக புகார் அளிக்க கூடிய ஒரு அமைப்போ இந்நாட்டில் இல்லை.

இணைய பயன்பாடு விரைவாக வளர்ந்து வருவதால் இந்த இணைய உலகில், பல்வேறு இணையதளங்களில் பதிவுசெய்து பகிரப்படும் தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களின் மின்னணு-சேமித்தல்/பகிர்வு ஆகியவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் தலையாய கடமையாக மாறி உள்ளது. தற்போது ஆன்லைனில் தகவல்களை பாதுகாப்பதற்கான மறையாக்கம் மற்றும் குறியாக்க

(encryption) தொழில்நுட்பங்கள் பற்றி டென்சானியாவில் அதிகமாக விவாதிக்கப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் விரைவான டிஜிட்டல் மயமாக்கத்தால், குறியாக்கத்தைப் பயன்படுத்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆன்லைன் தொடர்பு சேவைகள் பெருகியுள்ளன. அவ்வாறான இணையம் தொடர்பான சேவைகளின் பெருக்கத்தினால் தேசிய பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் இந்நாட்டினுடைய சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு பெரும் சவால்கள் அதிகரித்துள்ளன.

இணைய பயன்பாட்டால் ஏற்படும் சவால்களை சமாளிக்க, டென்சானியா அரசு, தகவல் தொழில்நுட்பம் (தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் குறியீடு) விதிகள், 2021 என்ற ஒரு விதிமுறையினை 2021 பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்விதியினுடைய முதல் பகுதி பல பொருண்மைகளை வரையறுக்கின்ற வரையறை பிரிவாக உள்ளது. பகுதி-II இடைநிலை செயலிகளை ஒழுங்குபடுத்துகின்ற விதிகளை உள்ளடக்கியது. பகுதி-III செய்தி மற்றும் நடப்பு விவகார உள்ளடக்கத்தை (டிஜிட்டல் நியூஸ் மீடியா) வெளியிடுபவர்களையும் ஆன்லைன் க்யூரேட்டட் உள்ளடக்கத்தை (OTT தளங்கள்) வெளியிடுபவர்களையும் ஒழுங்குபடுத்துகிறது. புதிய விதிகள், சமூக ஊடகங்கள், டிஜிட்டல் மற்றும் வீடியோ ஸ்ட்ரீமிங் சேவைகளின் மீது அரசாங்கத்திற்கு தணிக்கை போன்ற அளவற்ற அதிகாரங்களை முன்பு எப்போதும் இல்லாத வகையில் அரசாங்கத்திற்கு அதிகாரங்களை வழங்குகிறது.

டென்சானியாவில் உள்ள முன்னணி சமூக ஊடக செயலியான நோட்ஸ்ஆப், தகவல் தொழில்நுட்பம், 2021 விதிகளின் பல விதிகள் 'பயனர் தனியுரிமைக்கு' கேடு விளைவிப்பதாக கவலை தெரிவித்து, இந்திரபிரஸ்தாவின் உயர் நீதிமன்றத்தை அனுகியுள்ளது. நோட்ஸ்ஆப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்று அதன் பயனர்களின் முழுமையான தனியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கும் 'என்ட்-டு-எண்ட் என்க்ரிப்ஷன்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகும். இந்த தொழில்நுட்பம் தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு இடையேயான செய்திகளின் பரிமாற்றம் பாதுகாப்பாகவும் ரகசியமாகவும் தனியுரிமையை உறுதிப்படுத்த உதவுகிறது. 487.5 மில்லியன் மாதாந்திர பயனர் தளத்தை டென்சானியா வழங்குவதால், இந்த விதிகளுக்கு இணங்குவது பேச்சு சுதந்திரம் மற்றும் தனியுரிமைக்கான மக்களின் உரிமைகளை மீறக்கூடும் என்று நோட்ஸ்ஆப் கூறியது.

2023 ஏப்ரல் 06-ஆம் தேதி, டென்சானியா அரசு மேற்படி தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் குறியீடு) விதிகள், 2021 இல் திருத்தங்களை அறிவித்தது. 2023 திருத்த விதிகள் ஆன்லைன் கேமிங்கை ஒழுங்குபடுத்துவதிலும் உண்மைச் செய்திகளை சரிபார்ப்பதிலும், மத்திய அரசு தொடர்பான தவறான அல்லது போலியான செய்திகளை சரிபார்ப்பதிலும் கவனம் செலுத்துவதற்கான திருத்தங்களை அது உள்ளடக்கியது.. அத்திருத்தத்தின் படி மத்திய அரசு தொடர்பான ஆன்லைன் தகவல்களின் உண்மையைச் சரிபார்க்கும் நோக்கத்தோடு, டென்சானியா அரசினுடைய வழிகாட்டுதலின் பெயரில் தகவல் பரிசோதனை பிரிவு ("FCU") நிறுவப்பட்டது. டென்சனியா அரசாங்கத்திற்கு தகவல்களின் நம்பகத்தன்மையை தீர்மானிக்கும் முழு அதிகாரத்தை வழங்கியது மேலும் போலியான அல்லது தவறாக கருதப்படும் இடுகைகளை அகற்ற இடைநிலை செயலிகளை நிர்ப்பந்திப்பதின் மூலம் பரந்த அளவிலான தணிக்கை அதிகாரங்களைப் பயன்படுத்துகிறது. அதன்படி தகவல் அடிப்படையில் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட FCU மூலம் உண்மை சரிபார்க்கப்படும்.

அரசியல் விமர்சகரும் ஊடகவியாளருமான திரு குணால் என்பவர் 2023 தகவல் தொழில்நுட்பம் திருத்த விதிகளின் 3(1)(II)(A) மற்றும் (C) விதிகளுக்கு இடைக்காலத் தடை கோரி, கின்சாய் (Kinsai) உயர் நீதிமன்றத்தை அனுகினார். அவ்வாறு அவர் தாக்கல் செய்த மனுவில், பத்திரிக்கை தகவல் பணியகம் என்ற அமைப்பின் மூலம் ஏற்கனவே மத்திய அரசுக்கு எதிராக வரக்கூடிய போலி செய்திகளை நிவர்த்தி செய்வதற்கு ஒரு வலுவான வழிமுறை அவ்விதிகளில் உள்ளது எனவும், (FCU) தகவல் பரிசோதனை பிரிவு என்ற இந்த புது விதியானது மத்திய அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை கட்டுப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட உள்நோக்கம் கொண்டது எனவும் கின்சாய் உயர்நீதிமன்றத்தில் அந்த வழக்கினை தொடர்ந்தார். கின்சாய் உயர்நீதிமன்றம் அவ்விதிக்கு தடை விதிக்க மறுத்த நிலையில், குணால் தற்போது உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

தகவல் தொழில்நுட்ப விதிகள், 2021, பகுதி II-ல் தெரிவிக்கப்பட்ட விதி 9 இன் படி, இணைய செய்தி வெளியீட்டாளர்கள் மற்றும் இணையமூலமாக பரிசோதிக்கப்பட்ட உள்ளடக்கத்தை (Online Curated Content) வெளியிடுபவர்கள், குறியீடு நெறிமுறைகளை (encryption) பின்பற்ற வேண்டும் என்றும், மூன்று நிலைகளில் இந்த புகாரினை தீர்வு பெரும் முறையை வலியுறுத்துகிறது. டென்சானியா நாட்டிலுள்ள

பத்திரிக்கை நடத்தை விதிமுறைகள் அந்நாட்டினுடைய பிரஸ் கவுன்சிலால் வடிவமைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி செயல்படுத்த படுகிறது.

எல்லா சட்டமும் தடைசெய்யப்பட்ட உள்ளடக்கத்தை இணையவழி செய்தி ஊடகம் வெளியிடக்கூடாது என்று தெரிவிக்கிறது. டென்சானியா நாட்டிலுள்ள பத்திரிகையாளர் கவுன்சிலின் பத்திரிகை நடத்தை விதிமுறைகள் மற்றும் கேபிள் டெலிவிஷன் நெட்வொர்க் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 இன் பிரிவு 5 இன் படியும் அதில் தெரிவிக்க பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க வேண்டுமென்று நெறிமுறைகள் கூறுகிறது. நிரல் குறியீடு ஆகியவற்றிற்கு இணங்க வேண்டும் என்று நெறிமுறைகள் கோட் கோருகிறது. மேற்படி சட்டத்தினுடைய விதி 9(3) படி, குறைகளை நிவர்த்தி செய்வதற்கான மூன்று அடுக்கு நெறிமுறைகளை வழங்குகிறது, இவ்விதியின் படி, இணைய செய்தி ஊடகம் மற்றும் OTT தளங்கள் மேற்படி கூறப்பட்டுள்ள நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணங்கவில்லை என்றால் பாதிக்கப்பட்ட எத்தரப்பினரும் புகார் தெரிவிக்க அனுமதி அளிக்கிறது. மேற்படியான விதிகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்ற விதி இருப்பதால் நாடு முழுவதும் உள்ள பல்வேறு ஊடகவியலாளர்கள் மற்றும் செய்தி ஊடகங்களிடமிருந்து இவ்விதிகளுக்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

மறுபுறம், இணைய நிரல் குறியீடு எனப்படுவது கம்பிவலை (Cable) சேவைகளை ஒழுங்குபடுத்துவதாகும். இவை இணையத்திலுள்ள எழுத்தாளர்கள், எடிட்டர்கள், மற்றும் வெளியீட்டாளர்களுக்கு பொருந்தாது. ட்ரீலெட் என்ற இணைய செய்தி ஊடகம் உச்ச நீதிமன்றத்தை அணுகி, 2021இன் தகவல் தொழில்நுட்ப விதிகள், விதி 9, தகவல் தொழில்நுட்ப (திருத்தம்) சட்டம் 2002 இன் விதிகளுக்கு எதிராக உள்ளது என்று கூறியது. மேலும், இவ்விதிகள், பாராளுமன்றத்துக்கு அளிக்கப்பட்ட சட்டம் உருவாக்குகின்ற அதிகாரத்தை மீறுகின்ற செயல் என்றும் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை மீறும் வகையில் இருப்பதாகவும் வாதிடப்பட்டது.

இந்நிலையில் தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021-ன் தொடர்பான உயர் நீதிமன்றங்களில் உள்ள பல்வேறு நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் ஒரே வழக்காக விசாரிக்க உச்ச நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

எழுவினாக்கள்:

1. தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021-இன் படி குற்றம்சாட்டப்பட்ட விதிகளின்படி, தகவல்களின் முதல் தோற்றுவிப்பாளரைக் கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் இடைநிலை செயலிகள் (social media intermediaries) அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தனி உரிமையுடன் ஒத்திருக்கிறதா? மற்றும் அவை தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-த்துடன் இசைவாக உள்ளதா?,
2. தகவல் பரிசோதனை (FCU) பிரிவின் செயல்முறை டென்சானியா நாட்டின் அரசு நிர்வாகத்திற்கு அதிகப்படியான அதிகாரத்தை வழங்குகிறதா மற்றும் அவை தகவல் தொழில்நுட்ப சட்டம், 2000ஐ மீறுகிறதா?
3. தகவல் பரிசோதனை பிரிவு என்ற அமைப்பு டென்சானிய நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தை மீறுகிறதா?
4. தகவல் தொழில்நுட்ப விதிகள், 2021இன் விதி 9-ல் கூறப்பட்டுள்ள குறியீடு நெறிமுறைகள் மற்றும் புகாருக்கு தீர்வு பெறும் மூன்று படிமான நிலைகளை குறிக்கும் விதிகள் தகவல் தொழில்நுட்பச் சட்டம்,2000 மற்றும் டிஜிட்டல் செய்தி ஊடங்கங்களின் சுதந்திரம் மற்றும் ஓடிடி (OTT) தளங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை மீறுகிறதா

குறிப்பு:

இந்திய குடியரசின் சட்டங்கள் டென்சனியன் குடியரசிற்கு பொருந்தும்.

*********************************************